SRI RAMACHANDRA

NEWS RELEASE

INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH

(Deemed to be University)

Porur, Chennai-600 116. www.sriramachandra.edu.in

# SRI RAMACHANDRA MARKS
# 15000 CLEFT LIP SURGERIES UNDER SMILE TRAIN

Chennai, 23rd November, 2019.

Sri Ramachandra Hospital of Sri Ramachandra Institute of Higher Education and Research has completed 15000 Cleft lip and palate surgeries under the Smile Train programme, USA. Speaking at an event to mark this occasion Ms.Leela Imam, Country Head, Smile train said that in the last 19 years it has completed 6,00,000 surgeries in India. In the coming years Smile Train will give nutritional support to these children so that every child born with this anomaly gets cured and leads a normal life like others. In India every year 35,000 of such children are born and current research indicates that in the near future corrective interventions may be done even before the birth of the child, she added.

Dr.Syed Altaf Hussain, Director, Cleft and Craniofacial Centre, said the outcome of surgeries at Sri Ramachandra Hospital exceeds the best anywhere in the world at a tiny cost compared to western nations. We are already in the process of developing this centre as a regional training facility for multidisciplinary cleft care and hope to expand our free of cost services to other Complex Craniofacial Anomalies. In addition to several ongoing projects Smile Train has promised a grant for cutting edge genetic research which might throw more light on the cause of clefts which has not been solved yet, Dr. Altaf said.

Dr.Jerard Selvam, Nodal Officer, Child Development and Early Intervention Programme, Tamilnadu said all the 34 districts in the state have early intervention centres and the key for success is early detection. Special teams of doctors and paramedics are visiting all schools regularly to detect all anomalies found in children for quick corrective treatment, he added.

Models and actors Ms.Priya Anand, Ms.Sahithya Jagannathan, Ms. Masoom Shankar and Mr. Krish Balajee who participated in the event pledged their support and expressed their willingness to be brand ambassadors of this movement.

Dr.K.V.Somasundaram, Chief Advisor, Academic, Dr.Mohan, HOD Plastic Surgery, Dr.K.Balaji Singh, HOD, General Surgery were among those who participated in the event.

………

For more information pl contact.. Dr. Syed Altaf Hussain, Director, The Cleft and Craniofacial Centre, 9600063199. Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578, mediarelations@sriramachandra.edu.in

NEWS RELEASE

# SRI RAMACHANDRA

**INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH**

(Deemed to be University)

Porur, Chennai-600 116. www.sriramachandra.edu.in


## ஸ்மைல் டிரெயினுடன் இணைந்து ஸ்ரீ இராமச்சந்திரா 15000 உதடு-அண்ணப்பிளவு சிகிச்சை சாதனை

சென்னை, நவம்பர் 23 2019

அமெரிக்காவின் ஸ்மைல் டிரெயின் நிறுவனத்துடன் இணைந்து ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனை 15000 குழந்தைகளுக்கு உதடு மற்றும் அண்ணப்பிளவு சீரமைப்பு சிகிச்சைகளை இலவசமாக செய்துள்ளது. இதனை குறிக்கும் வண்ணம் ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் இன்று நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் பேசிய ஸ்மைல் டிரெயின் இந்தியாவின் தலைமை அலுவலர் திருமதி. லீலா இமாம் பேசுகையில் இந்த அமைப்பு நாட்டில் இதுவரை 6,00,000 குழந்தைகளுக்கு இந்த அறுவை சிகிச்சைகள் மேற்கொண்டுள்ளதாகவும் வரும் காலங்களில் இவர்களின் ஊட்டச்சத்து குறைபாடு நீக்குவதற்கும் உதவிகள் அளிக்கப்பட உள்ளது என்று கூறினார். ஆண்டு தோறும் 35000 குழந்தைகள் இந்த குறைபாடுடன் பிறப்பதாகவும், தற்போது நடைபெற்று வரும் மருத்துவ ஆராய்ச்சியின் பயனாக எதிர்காலத்தில் குழந்தை பிறப்பதற்கு முன்பே சீரமைப்பு சிகிச்சையை செய்ய இயலக்கூடும் என்று கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய ஸ்ரீ இராமச்சந்திரா உதடு, அண்ணம், தாடை சீரமைப்பு மைய இயக்குனர் மருத்துவர் சையத் அல்டா.ஃப் ஹுசைன், ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனையில் செய்யபப்படும் இந்த சிகிச்சைகள் உலகத்தரம் வாய்ந்தவை என்றும் விரைவில் இங்கு பலதுறை மருத்துவர்களுக்கான இச்சிகிச்சை பயிற்சி மையம் உருவாக்கப்படும் என்று கூறினார். இந்த குறைபாடு எதனால் ஏற்படுகிறது என்பதை கண்டறிய ஆய்வுகளை மேற்கொள்ள ஸ்மைல் டிரெயின் நிறுவனம் உதவி அளிக்க முன்வந்துள்ளதாக மருத்துவர் அல்டா.ஃப் கூறினார்.

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய தமிழ்நாடு சிறார் வளர்ச்சி மற்றும் ஆரம்ப சிகிச்சை அமைப்பின் தலைவர் மருத்துவர் ஜெரார்டு செல்வம் பேசுகையில் மாநிலத்தின் எல்லா 34 மாவட்டங்களிலும் ஆரம்பத்திலேயே குறைபாடு நீக்கும் மையங்கள் உள்ளதாகவும் இந்த குறைபாடுகள் எவ்வளவு ஆரம்ப காலத்தில் கண்டறியப்படுகிறதோ அந்த அளவு சிகிச்சைகள் வெற்றியடையும் ஆதலால் மருத்துவர்கள் குழு எல்லா பள்ளிகளுக்கும் சென்று குழந்தைகளை தொடர்ந்து பரிசோதிக்கிறார்கள் என்று கூறினார்.

நடிகர்களும் மாடல்களுமான செல்வி ப்ரியா ஆனந்த், செல்வி சாஹித்யா ஜகந்நாதன், செல்வி மகூம் சங்கர் மற்றும் திரு. கிரிஷ் பாலாஜி இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்த இயக்கத்திற்கு தங்களுடைய ஆதரவை உறுதி செய்யும் வண்ணம் சிறப்பு தூதுவர்களாக விளங்க விருப்பம் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் தலைமை கல்வி ஆலோசகர் Dr. K.V. சோமசுந்தரம், ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைத் துறை தலைவர் Dr. மோகன் மற்றும் பொது அறுவை சிகிச்சைத் துறை தலைவர் Dr. K. பாலாஜிசிங் மற்றும் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

----------------------------------


மேலும் விபரங்களுக்கு........ Dr. Syed Altaf Hussain, Director, The Cleft and Craniofacial Centre, 9600063199. Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578, nallamuthu@hotmail.com; mediarelations@sriramachandra.edu.in